04.12.2024
OS. No. 185/2023
**வா.சா.2-** திரு.காளிமுத்து த/பெ.சுப்ரமணி

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)

**குறுக்கு விசாரணை :-**

நான் பதினொன்றாம் வகுப்பு வரை படித்திருக்கிறேன். நான் இ-சேவை மையம் வைத்து இருக்கிறேன். இந்த வழக்கை தாக்கல் செய்து இருக்கக்கூடிய மோகன்ராஜ் எனக்கு நன்றாக தெரியுமா என்றால் கடன் கொடுக்கும் போது அவர் என்னை அழைத்தார் அப்போது நான் கையொப்பம் செய்தேன். அதன் மூலம் எனக்கு அவரை தெரியும் .கடன் கொடுக்கல் வாங்கலுக்குப் பிறகு எனக்கு வாதி மோகன் ராஜை தெரியும். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 கடனுறுதிச்சீட்டை நான் தான் எழுதினேன். வா.சா.ஆ.1 கடனுறுதிச்சீட்டில் உள்ள வாசகங்களை எனக்கு இந்த வழக்கின் பிரதிவாதி ஆகிய ரெபேக்காள் அவர்கள் தான் சொன்னார்கள் .இந்த வழக்கின் பிரதிவாதி ஆகிய ரெபேக்காள் அவர்களை எனக்கு அவர் கடன் பெறுவதற்கு 5 வருடங்களுக்கு முன்பில் இருந்து தெரியும்.வா.சா.ஆ.1 கடனுறுதிச்சீட்டில் தேதி 31.03.2020 என குறிப்பிடப்பட்டு இருக்கிறது. இந்த வழக்கை தாக்கல் செய்துள்ள வாதி மோகன்ராஜ் என்ன வேலை பார்க்கிறார், எங்கு வேலை பார்க்கிறார் என்ற விவரம் எனக்கு தெரியாது. இந்த வழக்கில் கண்ட பிரதிவாதி ரெபேக்காள் நர்சாக வேலை பார்க்கிறார். ஆனால் எங்கு வேலை பார்க்கிறார் என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கின் வாதி மோகன்ராஜ் அவர்களை வா.சா.ஆ.1 கடனுறுதிச்சீட்டு எழுதுவதற்கு முன்பு எனக்கு தெரியாது. அவரைப் பற்றிய எந்த விபரமும் அதற்கு முன்பு வரை எனக்கு தெரியாது .வா.சா.ஆ.1 கடனுறுதிச்சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதிவாதி ரெபேக்காளின் விலாசம் எனக்கு தெரியுமா என்றால் அவர் என்னை அவரது வீட்டிற்கு அழைத்துச் சென்றிருக்கிறார் அதனால் தெரியும். அவரது வீடு காட்டூரில் அமைந்து இருக்கிறது. வா.சா.ஆ.1 கடனுறுதிச்சீட்டில் கண்ட வாதி

Adoere

மோகன் ராஜின் விலாசம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். பிரதிவாதி ரெபேக்காள் தான் என்னை அவர் பணம் கடன் வாங்கும் போது வாதியின் வீட்டிற்கு அழைத்துச் சென்று இருந்தார் .31.03.2020 ல் என்ன நடந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் அப்போது கொரோனா பெருந்தொற்று இருந்தது. அந்த சமயத்தில் அரசால் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு இருந்தது என்றால் சரிதான். அந்த சமயத்தில் பொதுமக்கள் யாரும் வீட்டை விட்டு வெளியே வரக்கூடாது என்று கூறப்பட்டு இருந்தது என்றால் சரிதான். 31.03.2020 ல் பஸ் போக்குவரத்து மற்றும் பொது போக்குவரத்து அனைத்தும் தடை செய்யப்பட்டு இருந்தது என்றால் அது பற்றி எனக்கு தற்போது நினைவில்லை. ரெபேக்காள் அவர்கள் ஓமந்தூர் அரசு மருத்துவமனையில் செவிலியராக பணியாற்றி வந்தார் என்றும் அது பற்றிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. கொரோனா பெருந்தோற்று காலத்தில் செவிலியராக பணியாற்றிய நபர்கள் அனைவரும் மருத்துவமனையில் தங்கி பணியாற்ற வேண்டும் என்று அரசு உத்தரவு பிறப்பித்து இருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 கடனுறுதிச்சீட்டில் குறிப்பிட்ட காலத்தில் பிரதிவாதி மருத்துவமனையில் தங்கிய பணியாற்றி வந்தார் என்றால் சரியல்ல. பிரதிவாதி கடந்த 31.03.2020 அன்று மருத்துவமனையில் தங்கி பணியாற்றி வந்த காரணத்தினால், நான் கூறுவது போல் வா.சா.ஆ.1 கடனுறுதிச்சீட்டில் கையொப்பம் எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல. அந்த தேதியில் அவர் வாதியிடமிருந்து எந்த தொகையும் கடனாக பெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. நானும் வாதியும் கூட்டாக சேர்ந்துபைனான்ஸ் தொழில் செய்து வருகிறோம் என்று சொன்னால் சரியல்ல. பைனான்ஸ் தொழில் சம்பந்தமாக நானும் வாதியும் நெருங்கிய நண்பர்கள் என்று சொன்னால் சரியல்ல. 2018 ம் வருடம் நானும் வாதியும் சேர்ந்து கூட்டாக நடத்தி வரும் சுமங்கலி பைனான்ஸ் என்ற நிறுவனத்தில் பிரதிவாதி கடன் வாங்கி இருந்தார் என்று சொன்னால் சரியல்ல. நானும் வாதியும் நெருங்கிய நண்பர்களாக இருக்கின்ற காரணத்தினால்

VerdictumIn

பிரதிவாதியுடன் வேலை பார்க்கும் பிரபு என்ற நபர் மீது திருச்சிராப்பள்ளி முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 156/2023 என்று ரூபாய் பத்து லட்சம் செலுத்த உத்தரவிட கேட்டு நான் வாதியாக இருந்து ஒரு வழக்கை தாக்கல் செய்து இருக்கிறேன் என்றால் அது என்னுடைய தனிப்பட்ட வழக்கு ஆகும். இந்த வழக்கில் கண்ட வாதி பிரபு என்ற நபர் மீது துறையூர் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் காசோலை மோசடி வழக்கை தாக்கல் செய்து இருக்கிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது . பிரதிவாதியை எனக்கு தெரியாது என்றும் வழக்கிற்காக நான் உண்மைக்கு மாறாக சாட்சி மதிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை:-**</u> இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.